முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி

நாள்: 27.11.2025, அ.வ.எண். 409/2016, வா.சா.1. சிவகுமார், த/பெ.திருமலைசாமி

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை**

1) தாவா சொத்துக்கள் எனது தகப்பனாரும், அவரது தம்பியும் சேர்ந்து 1960 ல் வாங்கியதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். வா சா ஆ 1 ஆவணத்தில் கிரயம் கொடுத்தவர்களுக்கு சொத்து எப்படி வந்தது என்று குறிப்பிட்டுள்ளார்கள் என்றால் அதை நான் கவனிக்கவில்லை. வா சா ஆ 1 ஆவணத்தில் 1 ம் லக்கமிட்டவருக்கு பிதுர் ராஜ்ஜித வகையில் வந்தது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். 2016 ஆகஸ்டில் பிரதிவாதிகள் இடையூறு செய்ததாக எனது பிராதில் கூறியுள்ளேன் என்றால் சரிதான். என்னுடைய தாவாவில் செல்லமுத்து கவுண்டரின் வாரிசுகள் என்று கூறிக்கொண்டு பிரதிவாதிகள் வந்து இடையூறு செய்ததாக கூறியுள்ளேன் என்றால் சரிதான்.

2) அ.வ.எண். 785/2008 வழக்கில் இந்த பிரதிவாதிகள் தான் செல்லமுத்துகவுண்டரின் வாரிசுகள் என்று தீர்ப்பளிக்கப்பட்ட விவரம் தெரியுமா என்றால் தெரியும். மேற்படி விவரம் எனக்கு எப்படி தெரியும் என்றால் நான் அவர்களுக்கு எதிராக கோவை மாவட்ட நீதிமன்றத்தில் அ.வ.எண். 1/2019 வழக்கு தாக்கல் செய்யும் போது தான் தெரிய வந்தது. மேற்படி வழக்கில் இந்த பிரதிவாதிகள் நிராகரிப்பு மனு கட்டளை 7 விதி 11 தாக்கல் செய்து மேற்படி மனு அனுமதிக்கப்பட்டு நாங்கள் தாக்கல் செய்த தாவா 1/2019 தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான். மேற்படி உத்தரவிற்கு எதிராக மேல்முறையீடு ஏதேனும் தாக்கல் செய்தேனா என்றால் இல்லை.

3) பிரதிவாதிகள் ஆகஸ்டு 2016 ம் தேதியன்று இடையூறு செய்ததாக

ஒப்பம் /– (R. சுஜாதா)

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பொள்ளாச்சி.

கூறியுள்ள நிலையில் குறிப்பிட்டு தேதி சொல்லவில்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள வா சா ஆ 3 முதல் 10 வரையான ஆவணங்கள் ஆகஸ்டு 2016 ற்கு பின்னிட்டு பெறப்பட்டவை என்றால் சரிதான். வழக்கிற்காக மேற்படி ஆவணங்கள் வாங்கினேன். அதற்கு முன்னர் மேற்படி ஆவணங்களை நான் பெறவில்லை என்றால் சரியல்ல. எங்களுடைய தேவைக்காக வாங்கியுள்ளேன். அந்த ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

4) எனது பிரமாண வாக்குமூலத்தில் கோவை மாவட்ட நீதிமன்றத்தில் அ.வ.எண். 1/2019 வழக்கு தாக்கல் செய்தது குறித்து குறிப்பிடவில்லை என்றால் சரிதான். தாவாவில் 8 வது பத்தியில் 09.10.2016 ல் சில பிரதிவாதிகள் என்று தான் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். சில பிரதிவாதிகள் என்று கூறிவிட்டு அனைத்து பிரதிவாதிகளையும் இந்த தாவாவில் கட்சி சேர்த்துள்ளது அவர்களுக்கு தாவா சொத்தில் உரிமையுள்ளது தெரிந்து தான் என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் இடையூறு செய்து ஆக்கிரமிப்பு செய்ய முற்பட்டது குறித்து காவல் நிலையத்தில் புகார் ஏதேனும் கொடுத்தேனா என்றால் கொடுத்தேன். அவர்கள் சிவில் வழக்கு என்பதால் நீதிமன்றத்தை அணுகும்படி கூறிவிட்டார்கள்.

5) மேற்படி விவரத்தை எனது பிராதில் கூறியுள்ளேனா என்றால் இல்லை. தாவா சொத்து பிதுர் ராஜ்ஜித வகையில் எனது தகப்பனாருக்கு கிரயம் கொடுத்தவருக்கு பாத்தியப்பட்டு இருந்ததால் அதில் இந்த பிரதிவாதிகளுக்கும் உரிமையுள்ளது என்றால் சரியல்ல. தாவா சொத்தில் செல்லமுத்து கவுண்டருக்கு பாத்தியப்பட்ட ஒரு பகுதியை மட்டும் தான் விற்க அவருக்கு உரிமையுண்டு என்றால் சரியல்ல. செல்லமுத்து கவுண்டருக்கு பாத்தியப்பட்ட ஒரு பகுதி பங்கு

ஒப்பம் /– (R. சுஜாதா)

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பொள்ளாச்சி.

சொத்து மட்டும் தான் என்னை கட்டுப்படுத்தும் என்றும் மற்றவை பிரதிவாதிகளுக்கு உரிமையுடையது என்றால் சரியல்ல.

6) ஒரு பகுதி பங்கு தவிர மற்றவை அனைத்து சொத்திலும் பிரதிவாதிகள் தான் இதுநாள் வரையில் சுவாதீனத்தில் இருந்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. நான் தாவாவில் குறிப்பிட்டுள்ளவாறு எவ்வித பிரச்சனைகளும் நடைபெறவில்லை என்றும் பிரதிவாதிகளுக்கு தாவா சொத்துக்கள் கிடைக்கக்கூடாது என்பதற்காக இந்த பொய்யான தாவாவை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. தாவா சொத்து மொத்தம் 28 ஏக்கர் என்றும் பிரதிவாதிகள் மேற்படி சொத்தில் அத்துமீறி நுழைந்ததாக கூறியுள்ள நிலையில் அவ்வளவு பெரிய பூமியில் எந்த காலை வழியாக பிரதிவாதிகள் அத்துமீறினார்கள் என்று எனது தாவாவிலோ, பிரமாண பத்திரிக்கையிலோ குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

7) தாவா சொத்தில் பிரதிவாதிகளின் பங்கு அவர்களுக்கே உரிமையுடையது என்பதால் நான் கேட்டுள்ள பரிகாரம் கிடைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் பிரதிவாதிகள் தாவா சொத்தில் அத்துமீறி நுழைந்திருந்தால் எனது சித்தப்பாவும் என்னோடு சேர்ந்து தாவா தாக்கல் செய்திருப்போம் என்றால் எனது சித்தப்பா தனியாக தாவா தாக்கல் செய்து ஒரு தலைபட்சமாக தீர்ப்பாகிவிட்டது. பிரதிவாதிகள் எனக்கு எவ்வித இடையூறு செய்யாததால் நான் கேட்டுள்ள நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் எனக்கு கிடைக்கக்கூடியது அல்ல என்றால் சரியல்ல. பிரதிவாதிகளுக்கு தாவா சொத்தில் 4 பங்கு உரிமையுள்ளது என்றும் அதை அவர்கள் அனுபவித்து வருவதை இடையூறு செய்வதற்கு எனக்கு எவ்வித உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. அதனால் தாவா பிரதிவாதிகளின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

ஒப்பம் /– (R. சுஜாதா)
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பொள்ளாச்சி.